**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM**

| | | |
|---|---|---|
| Case number | : | **CC 244 OF 2024** |
| Deposition of witness | : | **PW-1** |
| Name | : | **பழனிச்சாமி** |
| Father Name | : | **கணேசன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | **43** |

**All accused present.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 11.12.2024.

முதல் விசாரணை

1. நான் தற்போது காங்கேயம் பழைய கோட்டை ரோடு மொ முத்து பழனியப்பா அப்பார்ட்மெண்டில் வசித்து வருகிறேன். நான் அரசு பள்ளியில் உடற்கல்வி ஆசிரியராக உள்ளேன். நான் காங்கேயம் சக்தி நகரில் வாடகைக்கு வீடு எடுத்து கேட்டரிங் செய்து வருகிறேன். ஏதேனும் கேட்டரிங் ஆர்டர் வந்தால் மட்டுமே அந்த இடத்தை திறந்து உள்ளே சென்று வேலை செய்வோம். நான் வசிக்கும் வீடு அந்த இடத்தில் இருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தள்ளி உள்ளது.

2. கடந்த 01.9.2024 ஆம் தேதி விடுமுறை என்பதால் நானும் எனது மனைவியும் வீட்டை பூட்டி விட்டு ஈரோடு சென்று விட்டோம். நாங்கள்

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2024.12.11 19:08:30 +0530

மறுநாள் காலை 8.00 மணிக்கு நான் சக்தி நகரில் உள்ள கேட்டரிங் இடத்திற்கு வந்தபோது அதன் காம்பவுண்ட் கேட் திறந்து உள்ளே சென்றேன். ஆனால் உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் உள்ளே இருக்கும் இரண்டு பிரதான மரகதவுகளும் உடைக்கப்பட்டு இருந்தது. நான் உள்ளே சென்று பார்த்தபோது பீரோ திறக்கப்பட்டு அதிலிருந்த பேப்பர்கள் எல்லாம் கலைக்கப்பட்டு இருந்தது. நான் பீரோவை பூட்டுவதில்லை என்பதால் பீரோ உடைக்கப்படாமல் இருந்தது. அருகில் இருந்த ரூம்களிலும் பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது. அதிலும் வெறும் பாத்திரங்கள் மட்டுமே இருந்ததால் அங்கும் எதுவும் களவு போகவில்லை.

3. எங்களது வீட்டில் பொருட்கள் எதுவும் களவு போகாத காரணத்தினால் நான் புகார் கொடுக்க வேண்டாம் என்று எண்ணியிருந்தேன். நான் அப்படியே அந்த இடத்தை பூட்டிவிட்டு எனது வீட்டிற்கு சென்று விட்டேன். ஆனால் இதே போன்ற குற்றங்கள் நடைபெறக்கூடாது என்ற எண்ணத்தில் மீண்டும் 18.9.2024 ஆம் தேதியில் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரை நானே எழுதி கையொப்பம் செய்தேன். **(அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. பின்பு போலீசார் மாலை சுமார் 5:30 மணி அளவில் அங்கு வந்தார்கள். வரைபடம் வரைந்து விவரம் எழுதி இருவரிடம் கையொப்பம் வாங்கினார்கள். பின்னர் கைரேகை நிபுணர்களைக் கொண்டு நான் காண்பித்த இடங்களில் கைரேகை சேகரித்தார்கள். எனது கைரேகைகளையும்

சேகரித்தார்கள். பின்னர் அருகே இருக்கும் சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்து சேகரித்தார்கள்.

5. போலீசார் 14.10.2024 தேதியில் எனக்கு போன் செய்து சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பிடித்து விட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் புகாரில் எனது முகவரியாக சக்தி நகர் முகவரியை கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் சக்தி நகரில் கேட்டரிங் மட்டும் தான் செய்து வருகிறோம் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில் எங்களது வீட்டில் கைரேகை நிபுணர்கள் கைரேகைகளை சேகரிக்கவில்லை என்றாலும் எதிரிகளைப் பிடித்த பின்பு தான் கை ரேகைகள் சேகரிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் நான் கேட்டரிங் செய்யும் இடத்தில் பீரோ எதுவுமில்லை என்றாலும் நான் இந்த வழக்கிற்காக பீரோ இருப்பதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும் போலீசார் கேட்டதன் பேரில் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் நான் கொடுத்த புகாருக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. ையா

**<u>3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

3 மற்றும் 4 ம் எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவி**ல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம் (FAC)